# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **மரபுக் கவிதைகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மரபுக்கவிதைகள்

## முடியரசன்:

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | துரைராசு |
| ஊர் | - | பெரியகுளம் (தேனி மாவட்டம்) |
| பெற்றோர் | - | சுப்பராயலு, சீதாலட்சுமி |
| காலம் | - | 07-10-1920 முதல் 1998 வரை |
| இயற்றிய நூல்கள் | - | பூங்கொடி, காவியப்பாவை,வீரகாவியம், முடியரசன் கவிதைகள், ஊன்றுகோல் |
| சிறப்பு பெயர்கள் | - | திராவிட இயக்கக் கவிஞர் |

**சிறப்புகள்:**

- பாரதிதாசன் பரம்பரை தலைமுறைக் கவிஞர்களுள் மூத்தவர் - முடியரசன்.
- பூங்கொடி என்ற காவியத்துக்காக 1966 ல் தமிழக அரசின் பாரதிதாசன் பரிசு பெற்றவர் - முடியரசன்.
- தமிழக அரசின் பரிசை பெற்ற நூல் - முடியரசன் கவிதைகள்.
- தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசினை பெற்ற நூல் - பூங்கொடி காவியம்.
- போர்வாள், குயில், கதிரவன் முதலான இதழ்களில் முடியரசன் கவிதைகள் வெளிவந்தன.
- பொன்னி இதழில் முடியரசன் கவிதைகள் வெளி வந்ததால் பாரதிதாசன் பரம்பரை என அழைக்கப்பட்டார்.
- தமிழ் என் தெய்வம், தமிழ் என் தாய், என் தந்தை, என் காதலி, என் மகன் எனும் தலைப்புகளில் கவிதை இயற்றியவர் - முடியரசன்
- பறம்பு மலையில் நடந்த விழாவில் குன்றக்குடி அடிகளால் கவியரசு பட்டம் பெற்றவர் - முடியரசன்.
- இளமையிலேயே சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர் - முடியரசன்.
- தமது மறைவின் போதும் எச்சடங்கும் செய்ய வேண்டாம் என சடங்குகளை மறுத்தவர் - முடியரசன்.
- காரைக்குடி மீனாட்சி சுந்தரனார் உயர்நிலை பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றியவர் - முடியரசன்.
- முடியரசனின் கவிதைகளை இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்ட அமைப்பு - சாகித்திய அகாடமி.
- பாரதிதாசனுடன் நெருங்கிப் பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப்பாடியவர் - முடியரசன்.
- தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிய நட்பு கொண்டவர் - முடியரசன்.
- பண்டித மணி, கதிரேசன் செட்டியாரைப் பற்றி முடியரசன் எழுதிய நாடகம் - ஊன்றுகோல்.

❖ சுவை புதிது, பொருள் புதிது, அழியாத சோதி மிக்க நவகவிதை என்று அழைக்கப்படுவது - முடியரசனின் மறுமலர்ச்சி பாடல்கள்.

**முடியரசன் குறித்த புகழுரை:**

❖ தமிழ் நாட்டின் வானம்பாடி என அறிஞர் அண்ணாவால் புகழப்பட்டவர் - முடியரசன்.

**மேற்கோள்:**

- "காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்
  கைம்மாறு விழைந்துப்புகழ் பெறுதல்வேண்டி" **-முடியரசன் கவிதைகள்**

- "ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும்
  ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்" **- முடியரசன் கவிதைகள்**

- ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
  அன்னைத் தமிழ் பேசுதற்கு நானுகின்ற
  தீங்குடை மனப்போக்கர் வாழும் நாட்டில்
  தென்படுமோ மொழியுணர்ச்சி **- முடியரசன்**

- மணவினையில் தமிழுண்டோ
  வாய்ப்பேச்சுத் தமிழுண்டோ
  விணவினையில் தமிழுண்டோ **- முடியரசன்**

- "மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டு
  மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்" **- முடியரசன் கவிதைகள்**

- அன்னை மொழி பேசுவதற்கு நாணுகின்ற
  தீங்குடை மனப்போக்கர் வாழும் நாட்டில்
  தென்படுமோ மொழியுணர்ச்சி? **- முடியரசன்**

- தமிழர் திருநாளாம் தை முதல் நாளாம்
  அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள் **- முடியரசன்**

- பூக்கின்றமலர்கலெல்லாம் மலர்கள் அல்ல
  புதியவனாய் வரவவெல்லாம் புதுமை அல்ல **- முடியரசன்**

- செங்கதிரால் தாமரைகள் சிரித்திருக்கும்
  சேர்மதியால் அல்லிமலர் வாய்சிரிக்கும் **- முடியரசன்**

- வயலுக்கு வரப்பொன்றும் வேண்டாம் என்றால்
  வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டாம்

- கடல் சுமந்தாள், மலைசுமந்தாள், கான் சுமந்தாள்
  கால்நடைகள் பல சுமந்தாள் **- முடியரசன் (மனிதனைத் தேடுகின்றேன்)**

## வாணிதாசன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | எத்திராசலு (எ) அரங்கசாமி |
| ஊர் | - | புதுவையை அடுத்த வில்லியனூர் |
| பெற்றோர் | - | அரங்க திருக்காமு, துளசியம்மாள் |
| காலம் | - | 22 - 07 - 1915 முதல் 07 - 08 - 1974 வரை |
| இயற்றிய நூல்கள் | - | குழந்தை இலக்கியம், தமிழ் பிரெஞ்சு கையகர முதலி, எழிலோவியம், தமிழச்சி, கொடி முல்லை, தீர்த்தயாத்திரை, இன்ப இலக்கியம், பொங்கல் பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், குழந்தை இலக்கியம், தொடுவானம், காடு, பாட்டு பிறக்குமடா |
| சிறப்பு பெயர்கள் | - | கவிஞரேறு, பாவலர்மணி, தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த், ரமி |

**சிறப்புகள்:**

- ❖ பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக் கல்வி கற்றவர் - வாணிதாசன்.
- ❖ தமிழ் - பிரஞ்சு கையகரமுதலி நூலை வெளியிட்டவர் - வாணிதாசன்.
- ❖ பிரெஞ்சு குடியரசுத் தலைவரால் செவாலியர் விருது பெற்றவர் - வாணிதாசன்.
- ❖ வாணிதாசனின் பாடல்கள் உருசியத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் -பட்டுள்ளன.
- ❖ பாரதிதாசன் பரம்பரை என அழைக்கப்படும் பாவலர் தலைமுறையில் வருபவர்- வாணிதாசன்.
- ❖ சாகித்திய அகாடமி வெளியிட்ட தமிழ் கவிதைக் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ள பாடல்கள் - வாணிதாசன் பாடல்கள்.
- ❖ தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட, புதுதமிழ் கவிமலர்கள் எனும் நூல்களில் இடம் பெற்றவை -வாணிதாசன் பாடல்கள்.
- ❖ குற்றியலுகர ஒலியை முதன் முதலில் உவமையாக கையாண்டவர் - வாணிதாசன்.
- ❖ 34 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் - வாணிதாசன்.

**மேற்கோள்:-**

- “தலைசீவிப் பள்ளிக்கே ஓடு - நல்
  தங்கப் பதுமையாம் தோழர்களோடு ! ” **- வாணிதாசன் (மெய்ப்பொருள் கல்வி)**

- “கற்பிப்போர் கண்கொடுப்போரே - அந்தக்
  கணக்காயர் உரையில் இருசெவி சேரே” **-வாணிதாசன் (மெய்ப்பொருள் கல்வி)**

- நோக்கடா கீழ் வானம் தங்க காட்டாறு நுண்முகில்கள்
  ஆக்கிய அழகை காண ஆயிரம் கண்கள் வேண்டும் **- வாணிதாசன்**

- அன்பு வளர்ந்தால் அலைகடல் சூழ்
  நம்நாட்டில் துன்பமில்லை **- வாணிதாசன்**

## சுரதா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | இராசகோபாலன் |
| ஊர் | - | பழையனூர் (நாகை மாவட்டம்) |
| பெற்றோர் | - | திருவேங்கடம், செண்பகம் |
| காலம் | - | 23 - 11 - 1921 |
| இயற்றிய நூல்கள் | - | தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள், சாவின் முத்தம், உதட்டில் உதடு, பட்டத்தரசி, வார்த்தை வாசல், எச்சில் இரவு, முன்னும் பின்னும் |
| சிறப்பு பெயர்கள் | - | உவமைக் கவிஞர், தன்மான கவிஞர், கவிஞர் திலகம் |
| விருதுகள் | - | கலைமாமணி பட்டமும், பாவேந்தர் விருதையும் பெற்றுள்ளார் |

**சிறப்புகள்:**

- ❖ பாரதிதாசன் மீது கொண்ட அன்பினால் தம் பெயரை சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டவர் -சுரதா.
- ❖ சுப்புரத்தினதாசன் என்பதன் சுருக்கமே சுரதா ஆகும்.
- ❖ பாரதிதாசனின் தலை மாணாக்கர்களில் ஒருவர் - சுரதா.
- ❖ பாக்களிலே சொல்லாய்வுக்கு வித்திட்டவர் - சுரதா.
- ❖ இவர் நடத்திய இதழ்கள் - காவியம், இலக்கியம், ஊர்வலம், சுரமா.
- ❖ காவியம் என்பது முதல் கவிதை இதழ் ஆகும்.
- ❖ சுரதாவின் சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல் - தேன்மழை.
- ❖ தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி விருது பெற்ற நூல் - தேன்மழை.
- ❖ தமிழக இயல் இசை நாடகமன்றம் வழங்கும் கலைமாமணி பட்டம் பெற்றவர் - சுரதா
- ❖ பன்னரும் தமிழ் பாவலருக்கெல்லாம் தலைமைப் பாவலர் என அழைக்கப்படுபவர்- சுரதா.
- ❖ தமிழக அரசு வழங்கும் பாவேந்தர் நினைவுப் பரிசினை முதலில் பெற்றவர் - சுரதா.
- ❖ தித்திக்கும் தமிழிலே முத்து முத்தாய் பாடல் செய்தவர்- திருவள்ளுவர் எனக் கூறியவர் சுரதா.
- ❖ பாம்பெல்லாம் பூமியையே பாதமாகப்<br>பயன்படுத்திக் கொள்ளுகின்ற காரணத்தால்<br>சோகம் தராதவன் அசோகன் **- சுரதா**

- ❖ பாம்புக்கு பாதம்பூ எனப் பெயரிட்டவர் - சுரதா
- ❖ அம்மி அம்மி அரைத்திட உதவும் கல்லை அம்மிக்கல் என்கிறோம் - சுரதா
- ❖ சிக்கனம் என்ற தலைப்பில் சுரதா இயற்றிய பாடல் 8ஆம் உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இடம்பெற்றது.

**மேற்கோள்:**

- முல்லைக்கோர் காடுபோலும்

முத்துக்கோர் கடலேபோலும்
சொல்லுக்கோர் கீரன்போலும்
தூதுக்கோர் தென்றல்போலும்
கவிதைக்கோர் பரணர்போலும்
வில்லுக்கோர் ஓரிபோலும்
விளங்கினார், வென்றார், நின்றார்

**-மறைமலை அடிகளை உவமையால் சுரதா பாராட்டியது**

- உரைநடையின் சிக்கனம் தான் கவிதை
  ஓங்கும் உணர்ச்சிகளின் சிக்கனம்தான் அடக்கம் **- சுரதா**

- பழந்தமிழ் கற்றல் இன்பம், பலநாடு சுற்றல்இன்பம் **- தேன்மழை - சுரதா**

- கற்றவர் முன்தாம் கற்ற, கல்வியைக் கூறல்இன்பம் **- தேன்மழை - சுரதா**

- இரட்டை கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை **- சுரதா**

- வினைச்சொற்கள் வேற்றுமையை ஏற்பதில்லை
  வெறும் பாட்டை தமிழ்ச் சங்கம் சேர்ப்பதில்லை **- சுரதா**

## கண்ணதாசன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | முத்தையா |
| ஊர் | - | சிறுகூடல்பட்டி (சிவகங்கை) |
| பெற்றோர் | - | சாத்தப்பன், விசாலாட்சி |
| காலம் | - | 24.06.1927 முதல் 17-10-1981 வரை |
| இயற்றிய நூல்கள் | - | 5000 க்கும் மேற்பட்ட திரைப்பட பாடல்கள், ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடிமகாகாவியம், ஏசுக்காவியம், இராசதண்டனை, ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடி திருவிழா, சேரமான் காதலி, அர்த்தமுள்ள இந்துமதம், சிங்காரி பார்த்த சென்னை. |
| சிறப்பு பெயர்கள் | - | காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா, கவியரசு, சிறுகூடல்பட்டியின் பாட்டுப் பறவை, ஆரோக்கிய சாமி, துப்பாக்கி. |

❖ ஆசிரியர் - சேலம் மாவட்டம் சலகண்டபுரம் (சலங்கை) பா.கண்ணன் என்ற நாடக ஆசிரியரின் தாசன்.

❖ இதழ்கள் - தென்றல், திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன், கடிதம், தமிழ்மலர், மேதாவி, திருமகள், திரைஒளி முதலிய இதழ்களை தொடங்கினார்.

❖ மனைவிகள் - 1. பொன்னம்மாள் 2. பார்வதி 3. வள்ளியம்மை

**சிறப்புகள்:**

❖ தெய்வானை ஆச்சியால் நாராயணன் என்ற பெயரால் தத்தெடுத்து வளர்க்கப்பட்டவர் - கண்ணதாசன்.
❖ அமராவதி புதூர் குருகுலத்தில் உள்ள ஓர் உண்டி உறைவிடப்பள்ளியில் ஏழாம் வகுப்பு வரை படித்த கவிஞர் - கண்ணதாசன்.
❖ தமிழக அரசின் இரண்டாவது அரசவைக் கவிஞராகப் பதவி வகித்தவர் - கண்ணதாசன்.
❖ கண்ணதாசனின் சாகத்திய அகாடமி விருது பெற்ற நூல் - சேரமான் காதலி புதினம்.
❖ அண்ணாமலையரசர் நினைவு பரிசினைப் பெற்றவர் - கண்ணதாசன்.
❖ பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்சாரத்தை எல்லாம் தம்பாட்டில் எடுத்துக்கூறியவர் - கண்ணதாசன்.
❖ கம்பர் அம்பிகாவதி வரலாற்றை வைத்து கண்ணதாசன் படைத்த நாடகம் - இராசதண்டனை.
❖ பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர் சாரத்தையெல்லாம் தமது பாடல்கள் வழியே பரப்பியவர் - கண்ணதாசன்
❖ கண்ணதாசனை திரைப்படத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர் - இயக்குநர் ராம்நாத்.
❖ கண்ணதாசனின் முதல் திரையிசைப் பாடல் -களங்காதிருமனமே- கள்வனின் காதலி.
❖ கண்ணதாசனின் இறுதி திரையிசைப் பாடல் - கண்ணே கலைமானே - மூன்றாம் பிறை.
❖ கதை வசனம் எழுதிய திரைப்படம் - இல்லற ஜோதி.
❖ கவிதைகள் - ஏழு தொகுதிகள்.
❖ திரையிசைப் பாடல்கள் - ஐந்து தொகுதிகள்.
❖ மாங்கனி-திருச்சி சிறையிலிருந்தபோது எழுதிய முதற் காவியம்.
❖ அட்டனத்தி ஆதிமந்தி - காதல் காப்பியம்.
❖ இயேசு காவியம் - இறுதியாக எழுதிய நூல், இது ஒரு காப்பிய நூல்.
❖ ஸ்ரீ கிருஷ்ணகவசம் - பக்திப்பாடல்.

**பரிசுகளும் பாராட்டும்:**
❖ தலைசிறந்த பாடலாசிரியருக்கான மத்திய அரசின் தேசிய விருதினை 1969 ல் பெற்றுள்ளார்.
❖ முன்னால் முதலமைச்சர் M.G.இராமச்சந்திரன் அவர்களால் தமிழக அரசின் அரசவைக் கவிஞர் பட்டம் 1978-ல் வழங்கப்பட்டது.
❖ 1979-ல் அண்ணாமலையார் நினைவுப் பரிசினை பெற்றார்.

- ❖ சேரமான் காதலி எனும் நாவலுக்காக 1979-ல் சாகித்ய அகாடமியின் விருதினைப் பெற்றார்.
- ❖ காதல் தத்துவம், இயற்றமிழ் கவிதை பாடுவதில் வல்லவர்.
- ❖ வனவாசம், மனவாசம் என்று இரு தொகுதிகளில் சுயவரலாற்றை படைத்துள்ளார்.
- ❖ சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கண்ணதாசனுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

**மேற்கோள்:**

**கண்ணதாசனின் கவிதைகள்**

- செந்தமிழ் சொல்லெடுத்து இசை தொடுப்பேன்
  வண்ணச் சந்தத்திலே கவிதை சரம் தொடுப்பேன்

- கதிர்வெடித்து பிழம்புவிழக் கடல்கொதித்து சூடேற்ற

- அழகுதெய்வம் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்ததோ

- எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் -இங்கு
  இல்லாமை இல்லாத நிலைவேண்டும்

- "நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
  எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" **- கண்ணதாசன்**

- மாற்றம் என்பது மானிடத் தத்துவம் **- கண்ணதாசன்**

- "வீடுவரை உறவு வீதிவரை மனைவி
  காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ"

- போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் **- கண்ணதாசன்**

- கட்டற்று வானிலே தவழ்கின்றகாற்றினைக் கைது செய்தாரு மில்லை **- கண்ணதாசன்**

- தட்டின்றி வையகம் தந்ததோர் உரிமையைத் தடை செயல் முறைமையாமோ
  **- கண்ணதாசன்**

- அடிமைகள் எங்கெலாம் இருப்பினும் அன்னவர்க் கானந்தம் தருவ தோர்நாள்
  **- கண்ணதாசன்**

- குடிகளும் மொழிகளும் இனங்களும் பல்வகை குவியுமிக் கண்ட முற்றும்
  **- கண்ணதாசன்**

- வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
  வாசல் தோறும் வேதனை இருக்கும் **- கண்ணதாசன்**

- பசுமை நிறைந்த நினைவுகளே பாடித் திரிந்த பறவைகளே **- கண்ணதாசன்**

- "சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ…
  தெய்வமே உண்மையாம் தேம்பி அழவையாமோ" **- நேரு இறந்தபோது பாடியது**

## உடுமலை நாராயண கவி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | நாராயணசாமி |
| காலம் | - | 25-09-1899 முதல் 23-05-1981 வரை |
| ஊர் | - | உடுமலைப் பேட்டை (திருப்பூர் மாவட்டம் பூவிழைவாடி) |
| பெற்றோர் | - | கிருஷ்ணசாமி, முத்தம்மாள் |
| இயற்றிய நூல்கள் | - | திரைப்பட பாடல்கள், நாடக எழுத்தாளர் |
| சிறப்பு பெயர்கள் | - | பகுத்தறிவு கவிராயர், கலைமாமணி, கவிவாணர், பெரியார் பெருந்தொண்டர் |
| ஆசிரியர் | - | முத்துச்சாமி கவிராயர் |

**சிறப்புகள்:**

- கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனால் திரை உலகிற்கு வந்தவர்.
- சங்கரதாஸ் சுவாமிகளிடம் யாப்பிலக்கணம் கற்றவர் - உடுமலை நாராயணகவி.
- மகாகவி பாரதியாரின் நட்பிற்குப் பின்பு சமுதாயப் பாடல்களைப் பாடியவர் - உடுமலை நாராயணகவி.
- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் போன்ற திராவிட இயக்க தலைவர்களுடன் நெருங்கிய நட்பு பாராட்டியவர் - உடுமலை நாராயணகவி.
- சீர்திருத்தக் கருத்துக்களை முதன் முதலில் திரைப்பட பாடல்களில் புகுத்தியவர் - உடுமலை நாராயணகவி.
- "அவர் கோட்டை நான் பேட்டை" என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை பாராட்டியவர் - உடுமலை நாராயணகவி.
- நாட்டுப்புறப் பாடல் மெட்டுகளைத் திரைப்படத்திற்கு அறிமுகம் செய்தவர் - உடுமலை நாராயணகவி.
- திருக்குறள் கருத்துக்களை மிகுதியாக பயன்படுத்தியவர் - உடுமலை நாராயணகவி.
- திரைப்படப் பாடல்களை வருணனையை விட்டு கருத்தை நோக்கி நகர்த்தியவர் - உடுமலை நாராயணகவி.
- பாபநாசம் சிவம், கண்ணதாசன் ஆகியோருக்கு இடைப்பட்ட காலத்தில் புகழ் பெற்றிருந்தவர்.
- பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் எழுதி, கவிராயர் எனும் பட்டம் பெற்றவர் - உடுமலை நாராயணகவி.

**மேற்கோள்:**

**உடுமலை நாராயணகவி பாடல்கள்:**

- "நெனச்சதை எல்லாம் எழுதி வச்சது அந்த காலம்"– உடுமலை நாராயணகவி
- "போகாதே போகாதே என்கணவா
  பொல்லாத சொப்பனம் நானுங் கண்டேன்" - கட்டபொம்மன் கூத்து
- "பெண்களை நம்பாதே கண்களே
  பெண்களை நம்பாதே" **- தூக்குத் தூக்கி**
- "காலேஜ் படிப்பு காப்பி ஆத்துதாம்
  பி.ஏ. படிப்பு பெஞ்சு துடைக்குதாம்" **- எங்க வீட்டு மகாலட்சுமி**
- "இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பளே
  இங்கிலீசு படித்தாலும் இந்தத் தமிழ்நாட்டிலே" **- விவசாயி**
- "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில்
  நிம்மதி கொள்வதென்பது ஏது" **- ரத்தக் கண்ணீர்**
- "விண்ணோடு கொஞ்சும் கலையழகே இசையமுதே" **- புதையல்**
- "பட்டணந்தான் போகலாமடி - பொம்பளே
  பணங்காசு தேடலாமடி"
- சும்மா இருந்தா சோத்துக்கு நட்டம்
  சோம்பல் வளர்த்தால் ஏற்படும் கஷ்டம்

**புகழுரை:**

- 3.12.2008-ல் இந்திய அஞ்சல் துறை சார்பாக 500 காசுகள் அஞ்சல் வில்லை வெளியிடப்பட்டது.
- தமிழக அரசின் சார்பாக உடுமலைப் பேட்டையில் மணிமண்டபம் அமைக்கப்பட்டது.

## பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்

| | | |
|---|---|---|
| ஊர் | - | செங்கப்படுத்தான்காடு - பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) |
| காலம் | - | 13-04-1930 முதல் 08-10-1959 வரை |
| பெற்றோர் | - | அருணாச்சலனார், விசாலாட்சி |
| சிறப்பு பெயர்கள் | - | மக்கள் கவிஞர், பாட்டாளிக் கவிஞர், பாடல் மேதை |

**சிறப்புகள்:**

- ❖ உழைக்கும் மக்களின் துயரங்களையும், பொதுவுடைமைச் சிந்தனைகளையும், தனது பாடல்களின் மூலம் பரப்பியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.
- ❖ திராவிட இயக்கத்திலும், கம்யூனிசக் கோட்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டவர்.
- ❖ எளிய தமிழில் அனைவருக்கும் புரியும் படி கவிதைகளை இயற்றியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.
- ❖ பட்டுக்கோட்டை இயற்றி வந்த கருத்துச் செறிவும், கற்பனை உரமும் மிகுந்த பாடல்களை வெளியிட்ட பத்திரிக்கை - ஜனசக்தி.
- ❖ பாவேந்தர் பாரதிதாசனின் மாணாக்கர்களில் ஒருவர் - கல்யாணசுந்தரம்.
- ❖ 1954ல் படித்த பெண் படத்தில் முதன் முதலாக பாடல் எழுதியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.
- ❖ முதல் திரையிசைப்பாடல் - நல்லதைச் சொன்னால் நாத்திகனா.
- ❖ விவசாய இயக்கத்தை சிவராமன், இரணியன் ஆகியோருடன் இணைந்து துவக்கியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

**புகழுரை:**

- ❖ கல்யாணசுந்தரத்தை நீ மீண்டும் தோன்றிய பாரதியடா என்றவர் - ஜீவானந்தம்.
- ❖ எனது வலது கை என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தைப் பாராட்டியவர் - பாரதிதாசன்.

**மேற்கோள்:**

- "செய்யும் தொழிலே தெய்வம்,
  அந்தத் திறமைதான் நமது செல்வம்" **- கல்யாணசுந்தரம்**

- "தூங்காதே தம்பி தூங்காதே
  உயர்பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்
  கொண்ட கொள்கையில் தூங்கியவன் புகழ் இழந்தான்"

- "திருடாதே பாப்பா திருடாதே"

- "மானைத் தேடி மச்சான் வரப் போறான்"
- ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே மனிதன்
  ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே"

- "இந்த திண்ணைப் பேச்சு வீரரிடம் - ஒரு
  கண்ணா இருக்கணும் அண்ணாச்சி"

- "காதலிலே தோல்வியுற்றான் கன்னி ஒருத்தி
  கலங்குகிறான் அவனை நெஞ்சில் நிறுத்தி"

- "ஆடைக்கட்டி வந்த நிலவோ"
- "சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா"
  "வேப்பமர உச்சியில் நின்று"
- "காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்குக்
  கையுங்காலுந்தானே மிச்சம்"
- "வசதி இருக்கிறவன் தரமாட்டான் - அவனை
  வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்"
- "கொடுத்தவனே எடுத்துக் கொண்டாண்டி"
- "முகத்தில் முகம் பார்க்கலாம்"
- உச்சிமலையிலே ஊறும் அருவிகள்
  ஒரே வழியில் கலக்குது ஒற்றுமையில்லா
  மனிதகுலம் உயர்வு தாழ்வு வளர்க்குது

## மருதகாசி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | அ. மருதகாசி |
| ஊர் | - | மேலக்குடிகாடு (திருச்சி) |
| பெற்றோர் | - | அய்யம்பெருமாள், மிளகாயி அம்மாள் |
| காலம் | - | 13-02-1920 முதல் 29-111989 வரை |
| இயற்றிய நூல்கள் | - | மருதக்காசி பாடல்கள் |
| ஆசிரியர் | - | ராஜகோபாலையர் |
| சிறப்பு பெயர்கள் | - | திரைகவித்திலகம், கலைமாமணி |

### சிறப்புகள்

- மருதக்காசி பாடல்கள் உழவும் தொழிலும், தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 1968ல் கலைமாமணி விருது பெற்றவர் - மருதகாசி.
- மார்டன் தியேட்டரின் இரட்டைக் கவிஞர்கள் - மருதகாசி, கா.மு.ஷெரிப்.
- 13 வயதில் முதல் பாட்டு: வழிநடைப்பாட்டாகிய காமன் பண்டிகை.
- முதன் முதலில் பாடல் எழுதிய திரைப்படம் - மாயாவதி.
- சம்பூர்ண ராமாயணப் படப் பாடல்கள் முழுவதும் எழுதியவர் - மருதகாசி.
- "ஜெகம் புகழும் புண்ய கதை ராமனின் கதையே" 53 வரிகளில் இராமாயணச் சுருக்கத்தை எழுதியவர் -மருதகாசி.
- 1968-இல் கலைமாமணி விருது பெற்றவர் - மருதகாசி.

- திரைக்கவித் திலகம் என்ற பட்டம் பெற்றவர் - மருதகாசி.
- துணைவன் படத்திற்கு சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றவர் - மருதகாசி.
- "மருதமலை மாமணியே முருகையா" என்ற பாடலுக்காக தமிழக அரசின் பரிசு பெற்றவர் - மருதகாசி.

**மேற்கோள்:**

**மருதகாசியின் பாடல்கள்:**

- "ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லை
  என்றும் நம்வாழ்விலே பஞ்சமே இல்லை"
  நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது
  நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துகொத்தாக" **- மருதகாசி**
- "மணப்பாறை மாடுகட்டி" **- மக்களைப் பெற்ற மகராசி**
- "நீலவண்ண கண்ணா வாடா" **- மங்கையர் திலகம்**
- "ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே" **- பாகப்பிரிவினை**
- "நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே" **- சதாரம்**
- "வசந்த முல்லை போலே வந்து
  அசைந்தாடும் வெண்புறாவே" **- சாரங்கதாரா**
- "வாராய் நீ வாராய் போகுமிடம் வெகுதூரமில்லை" **- மந்திரிகுமாரி**
- "கடவுள் என்னும் முதலாளி" - விவசாயி
- "என்னை விட்டு ஓடிப்போக முடியுமா" **- குமுதம்**
- "முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டு போலே" **- உத்தமபுத்திரன்**